மேம்படுத்தப்பட்டு, அந்த நூற்பாலை தொடர்ச்சியாகச் செயல்படுத்தப்படக்கூடிய நிலையிலே இருக்கின்றது. செயலிழந்த 12 கூட்டுறவு நூற்பாலைகளில், நாகப்பட்டினம் மாவட்டம், மணல்மேட்டிலே உள்ள மாவட்ட கூட்டுறவு நூற்பாலையின் மொத்த நிலப்பரப்பான 39.95 ஏக்கரில் 5.86 ஏக்கர் நிலம் அரசு கலைக் கல்லூரி அமைப்பதற்கு ஏதுவாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையின்படி 28–7–2015 அன்று உயர் கல்வித் துறைக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

இதைப்போல செயலிழந்த மற்ற நூற்பாலைகளில் வருங்காலங்களில் மாண்புமிகு அம்மா அவர்கள் செயல்படுத்தக்கூடியவற்றைச் செயல்படுத்த முன்வருவார்கள். மற்ற நூற்பாலைககளின் நிலங்களைத் தேவைப்படும் மற்ற துறைகளுக்கு, மாற்ற நிச்சயமாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆங்காங்கே பணிபுரிந்த அத்துணை தொழிலாளர்களுக்கும் அவர்களுக்கு எந்தவிதமான நிலுவைத் தொகையும் இல்லாமல் வழங்கப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா வரிசை எண் 98, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

98—

தரம் உயர்த்துதல்

***47209—திரு. ஓ.கே. சின்னராஜ்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2016 பிப்ரவரி 20

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, காரமடை ஒன்றியம், வெல்ஸ்புரம் ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் அறிவித்த அனைத்து திட்டங்களையும் 100 சதவிகிதம் நிறைவேற்றியதோடு மட்டுமல்லாமல், அடித்தட்டு மக்களின் கோரிக்கைகளெல்லாம் முழுவதுமாக நிறைவேற்றப்படும் இப்புனித ஆட்சியில், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் விதி 110–ன்கீழ் அறிவிக்கப்பட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து, வினாவிற்கான விடையினை சமர்ப்பிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் தொகுதிக்குட்பட்ட காரமடை ஊராட்சி ஒன்றியம், வெல்ஸ்புரத்தில் இயங்கிவரும் ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.

திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய மேட்டுப்பாளையம் தொகுதிக்குட்பட்ட வெல்ஸ்புரம் ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட வேண்டுமென்ற அவசியம் குறித்து நான் ஒரு வினாவைக் கொடுத்திருந்தேன். அந்த வினா அவைக்கு வருவதற்கு

2016 பிப்ரவரி 20]

முன்னதாகவே ஆணை பிறப்பிக்கப்பட்டு, மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது. வாழும் மனித தெய்வம், எங்களுடைய இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் தொகுதி மக்களின் சார்பாக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி, தங்கள் வாயிலாக எனது நெஞ்சம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினா வரிசை எண் 99, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

99—

புதிய கட்டடம்

***35558—திரு. பொன். ராஜா:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொன்னேரி தொகுதி, பொன்னேரியில் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

பொன்னேரி தொகுதியில் பழமையான வட்டாட்சியர் அலுவலகக் கட்டடத்தை இடித்துவிட்டு, புதிய வட்டாட்சியர் அலுவலகம் கட்டுவதற்கான பூர்வாங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா அவர்கள்.*

திரு. பொன். ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழாய் ஒளிர்ந்து, மூவேந்தராய்த் திகழ்ந்து, அவ்வைத் தாயின் அறநெறியில் வாழ்ந்து, தமிழர்களின் நெஞ்சமெல்லாம்